# கல்வி மலர்

தயாராகி விட்டீர்களா?

## நேஷனல் ஸ்காலர்ஷிப் தேர்வு

பிரதிபா கல்வி அறக்கட்டளையின் கீழ் செயல்படும், நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் கேரியர் எஜூகேஷன், நேஷனல் ஸ்காலர்ஷிப் தேர்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

**தகுதிகள்:** 5ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை பயிலும் மாணவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலை அல்லது கல்லூரிகளில் ஏதேனும் ஒரு துறையில் இளநிலை பட்டப் படிப்பு அல்லது டிப்ளமோ படிப்பு படிக்கும் மாணவர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

**தேர்வு முறை:** 'அப்ஜெக்டிவ்' அடிப்படையில், எழுத்து தேர்வு மூலம் தகுதியான மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

**எழுத்து தேர்வு:** பொது அறிவு, கணிதம் மற்றும் சமூக அறிவியல்

**விண்ணப்பிக்க கடைசி நாள்:** செப்டம்பர் 30

**மேலும் விபரங்களுக்கு:** www.niceedu.org

## பி.டி.சி., படிக்க ஆர்வமா?

நெய்வேலியில் உள்ள நேஷனல் பவர் டிரெய்னிங் இன்ஸ்டிடியூட், முதுநிலை டிப்ளமோ படிப்புக்கான மாணவர் சேர்க்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

**பாடப் பிரிவு:** போஸ்ட் டிப்ளமோ இன் தெர்மல் பவர் பிளான்ட் இன்ஜினியரிங்

**தகுதிகள்:** அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் உள்ளிட்ட ஏதேனும் ஒரு பாடப் பிரிவில், டிப்ளமோ பட்டம் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு கட்டுப்பாடு இல்லை.

'மெரிட்' அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெறும்.

**விண்ணப்பிக்க கடைசி நாள்:** செப்டம்பர் 26

**மேலும் விபரங்களுக்கு:** www.nptineyveli.in

## ஏர் இந்தியாவில் வேலை

மத்திய அரசின் கீழ் இயங்கும் ஏர் இந்தியா நிறுவனத்தில், கிராஜூவேட் டிரெய்னி பிரிவில் உள்ள பல்வேறு பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**பணியிடங்கள்:** ஏர்கிராப்ட் மெயின்டனன்ஸ் இன்ஜினியர் – ஏ.எம்.இ., மற்றும் இன்ஜினியரிங் சப்போர்ட் சர்வீஸ்

**வயது வரம்பு:** பொதுப் பிரிவு – 28, ஓ.பி.சி., – 31, எஸ்.சி.,/எஸ்.டி., – 33

**கல்வித் தகுதி:** பி.இ., அல்லது பி.டெக்., பட்டப் படிப்பில் மெக்கானிக்கல், ஏரோநாட்டிக்கல், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ், டெலிகம்யூனிகேஷன், இன்ஸ்ட்ருமென்டேஷன், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் உள்ளிட்ட ஏதேனும் ஒரு பாடப் பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 'கேட்' தேர்வில் பெற்ற மதிப்பெண்களும் கணக்கில் எடுத்து கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்க கடைசி நாள்:** செப்டம்பர் 15

**மேலும் விபரங்களுக்கு:** www.airindia.com

சிகரம் தொடு

## துன்பங்களை துரத்துவோம்!

– க.சரவணன், மதுரை.

**'எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்குதுன்னு தெரியலை! நான் எதை தொட்டாலும் விளங்க மாட்டேங்குது; அடி மேல அடி; ஒண்ணைத் தொட்டு ஒண்ணு வந்துட்டே இருக்கு!' – முதலில், இப்படி புலம்புவதை நிறுத்துவோம்.**



துன்பத்தை கண்டு ஓடுவதால், துன்பம் விலகுவது இல்லை! துன்பத்தை எதிர்ப்பதற்கு நம்மை நாம் தயார் செய்ய வேண்டும். எல்லையில்லா ஆற்றல் பெற்றவர்கள் நாம் என்பதை மறந்து விடக் கூடாது!

துன்பங்கள் என்பவை நம் வாழ்வின் ஒரு பகுதி. துன்பம் இல்லாமல் வாழ்வு அமைவதில்லை. பொதுவாக, நாம் எந்த செயலில் ஈடுபட்டாலும், அதில் வெற்றி மட்டுமே கிட்ட வேண்டும் என்று நினைத்து செயல்படுகிறோம். அதுதான் பிரச்னை! வெற்றி பெற்றால் இன்பம் தான்! ஆனால், ஏதோ ஒரு காரணத்தால் ஏற்படும் தோல்வி துன்பத்தை தருமானால், அதற்காக வருத்தம் கொள்ளக் கூடாது!

எப்போதும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளை கைவிடாது, துணிச்சலோடு, தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். இதனால், துன்பங்கள் தூள் தூளாகி காணாமல் போய்விடும்! அதன்பின், வெற்றிக்கனிகள் எளிதில் நம் வசமாகும்!

நகைச்சுவை நடிகர் சாப்ளின் வாழ்க்கையைப் பாருங்கள்! இளமையில், அவரது பெற்றோர்கள் பிரிந்து விட்டனர். தாயின் அரவணைப்பில் வாழ்ந்தார். வறுமை அவரை வாட்டி வதைத்தது. திருமண வீடுகளில் பாடினார். தந்தையின் பிரிவு, வறுமை, பசி என அனைத்து வருத்தத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, தான் பாடும் பாடலில், குரல் வழியே புதுமையை புகுத்தினார். சினிமாவில் நடிக்க வாய்ப்பு பெற்றார்.

ஆனால், கணவன் இன்றி வாழ்ந்த சாப்ளினின் தாய் பைத்தியமானார். சாப்ளினின் காதலி அவரை கைவிட்டாள். தொடர்ந்து, சாப்ளினுக்கு துக்கம். ஆனாலும், சாப்ளின் துவண்டு விடவில்லை. தன் நடிப்புத் தொழில் மேல் கொண்ட அதீத பக்தியினால், எல்லா துக்கங்களையும் மறந்து, மாறுபட்ட முறையில் நடித்தார். அனைத்து நடிகர்களும் திரையில் பேசி நடிக்கையில், செய்கை மூலமாகவே நடித்து, மக்களை சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தார். அதனாலேயே, வரலாற்றில் இன்றும் இடம் பிடித்து வாழ்கிறார்!

எப்போதுமே, நாம் எடுக்கும் தொடர் முயற்சிகள் தோல்வியில் முடியுமானால், அதற்காக நொந்து கொள்ளக் கூடாது! துன்பமான தருணங்களில் எடுக்கும் முயற்சிகள், நமக்கு சிறந்த அனுபவத்தை தரும். மேலும், துன்பங்களை ஏற்றுக் கொள்வதில் தான் வெற்றியின் ரகசியம் அடங்கியுள்ளது!

ஆகவே, துன்பங்களை கண்டு பயந்து ஓடாமல், அவற்றை எதிர்கொள்ளும் அறிவினை வளர்த்துக் கொள்வோம். வெற்றியினை நோக்கி பயணிப்போம்!

ஆய்வோம் அறிவோம்

## பட்டதாரிகளுக்கான வரப்பிரசாதம் 'கேட்!'



**பொறியியல் மற்றும் அறிவியல் பட்டதாரிகளின் சிறந்த எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் ஒரு முக்கிய நுழைவுத் தேர்வு தான், 'கிராஜூவேட் ஆப்டிடியூட் டெஸ்ட் இன் இன்ஜினியரிங்' எனப்படும் 'கேட்!'**

ஐ.ஐ.டி., – என்.ஐ.டி., – ஐ.ஐ.எஸ்சி., உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில், முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் முனைவர் ஆராய்ச்சி படிப்புகளில், கல்வி உதவித் தொகையுடன் படிக்கும் வாய்ப்பை இத்தேர்வின் மூலம் பெறலாம். இவை தவிர, மத்திய அரசின் கீழ் செயல்படும் பல்வேறு பொது நிறுவனங்களில் பணி வாய்ப்பினை பெறலாம்.

**யார் எழுதலாம்?:** இளநிலை பட்டப் படிப்பில் பொறியியல், தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் கட்டடக்கலை உள்ளிட்ட துறைகளில், ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் தேர்ச்சி அல்லது முதுநிலை பட்டப் படிப்பில் அறிவியல், கணிதம், புள்ளியியல், கணினி அறிவியல் அல்லது ஒருங்கிணைந்த அறிவியல் பட்டப் படிப்பில் தேர்ச்சி! பி.பார்ம். – எம்.எஸ்சி., – எம்.சி.ஏ., – எம்.டெக்., ட்யூயல் டிகிரி படித்தவர்களும் இத்தேர்வை எழுதலாம்.

**தேர்வு முறை:** இத்தேர்வில் மொத்தம், 23 பாடப் பிரிவுகள் உள்ளன. 'மல்டிபிள் சாய்ஸ்' அடிப்படையில், 'கம்ப்யூட்டர் பேஸ்டு டெஸ்ட்' எனும் சி.பி.டி., முறையில், 65 கேள்விகளுடன் 100 மதிப்பெண்களுக்கு இத்தேர்வு நடத்தப்படும். பொறியியல், கணிதம், மொழியியல், பகுப்பாய்வு திறன்கள் மற்றும் வேதியியல் உள்ளிட்ட பல பகுதிகளில், திறன்கள் சோதிக்கப்படும். இத்தேர்வில், 'நெகட்டிவ்' மதிப்பெண்களும் உண்டு!

**வேலைவாய்ப்பு:** பல்வேறு அரசு பொதுத்துறை நிறுவனங்கள், இத்தேர்வை அடிப்படை எழுத்துத் தேர்வாக கருதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகின்றன.

**ஜூனியர் பெல்லோஷிப்:** அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், டில்லி பல்கலைக்கழகம், ஐ.ஐ.டி., உள்ளிட்ட பல்வேறு கல்வி நிறுவனங்களில், 'ஜூனியர் பெல்லோஷிப்' வாய்ப்பும் இத்தேர்வின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

**வெளிநாட்டுக் கல்வி:** சிங்கப்பூரில் உள்ள நேஷனல் யுனிவர்சிட்டி ஆப் சிங்கப்பூர் கல்வி நிறுவனத்தில், இத்தேர்வை முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றனர். மேலும், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில் உயர்கல்வியை தொடர விரும்பும் மாணவர்கள், இத்தேர்வில் தகுதி பெற்றால் வாய்ப்பு பிரகாசம்!

**குறிப்பு:** இத்தேர்வில் பெறும் மதிப்பெண்கள், மூன்று ஆண்டுகள் வரை மட்டுமே செல்லுபடியாகும்.

**விண்ணப்பிக்க கடைசி நாள்:** அக்டோபர் 4

**மேலும் விவரங்களுக்கு:** www.gate.iitr.ernet.in

**தங்கம்**

செப். 3ம் தேதி நிலவரப்படி (சென்னை நிலவரம் / ரூபாயில்)

| | |
|---|---|
| 1 கிராம் (22 காரட்) – | 2,945 |
| 10 கிராம் (24 காரட்) – | 31,500 |

**வெள்ளி**

செப். 3ம் தேதி நிலவரப்படி (சென்னை நிலவரம் / ரூபாயில்)

| | |
|---|---|
| 1 கிராம் – | 50.00 |
| 1 கிலோ – | 46,760 |

# தினமலர் தொழில்

15 ஆண்டுகளில் முதன் முறையாக

## 3,000 தனியார் துறை நிறுவனங்களின் விற்பனை குறைந்தது; லாபம் உயர்ந்தது



மும்பை, செப். 5–

கடந்த, 2015–16ம் நிதியாண்டில், தனியார் துறையைச் சேர்ந்த, 2,932 நிறுவனங்களின் மொத்த விற்பனை குறைந்த போதிலும், நிகர லாபம் அதிகரித்துள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் முதன் முறையாக இதுபோன்ற நிலை ஏற்பட்டுள்ளது' என, ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

அதன் விபரம்:

அரசு மற்றும் நிதித் துறை சாராத, பங்கு சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள, 2,932 நிறுவனங்களின், கடந்த நிதியாண்டு செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதில், தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் தயாரிப்பு துறை நிறுவனங்களின் விற்பனை, 29.89 லட்சம் கோடி ரூபாயாக குறைந்துள்ளது. இது, முந்தைய, 2014 – 15ம் நிதியாண்டில், 31.19 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.

இதே காலத்தில், இந்நிறுவனங்களின் நிகர லாபம், 9.3 சதவீதம் உயர்ந்து, 1.82 லட்சம் கோடியில் இருந்து, 1.96 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

முந்தைய நிதியாண்டில், நிகர லாபம், 0.7 சதவீதம் குறைந்திருந்தது. மூலப் பொருட்கள் விலை சரிவினால், கடந்த நிதியாண்டில், நிறுவனங்களின் செயல்பாட்டு லாபம், 10.2 சதவீதம் உயர்ந்துள்ளது. இது, முந்தைய நிதியாண்டில், 5.3 சதவீதமாக இருந்தது.

நிறுவனங்களின் விற்பனை குறைந்த போதிலும், நிகர லாபம் உயர, வரி ஒதுக்கீட்டுச் செலவுகள் குறைந்திருந்ததும் ஒரு காரணம். சர்வதேச அளவில், விளைபொருட்கள் விலை சரிவடைந்ததால், உள்நாட்டில், தயாரிப்பு துறையில் பாதிப்பு ஏற்பட்டது.

இத்துறை நிறுவனங்கள் அவற்றின் இழப்பை, மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்பு பொருட்கள் மூலம் ஈடு செய்து உள்ளன. கடந்த, 15 ஆண்டுகளில் விற்பனை அடிப்படையிலான மூலப் பொருட்கள் மற்றும் பணியாளர் செலவினங்கள், கடந்த நிதியாண்டில் தான், மிகவும் குறைந்தபட்ச நிலைக்கும், அதிகபட்ச அளவிற்கும் சென்றன.

கடந்த நிதியாண்டில், விற்பனை, 1.6 சதவீதமாக குறைந்திருந்தது; இது, இதற்கு முந்தைய நிதியாண்டில், 3.7 சதவீதமாக இருந்தது. இதே காலத்தில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது சாராத சேவை துறை நிறுவனங்களின் விற்பனை, அதிகரித்து உள்ளது.

தயாரிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் சாரா சேவைகள் துறையில், செயல்பாட்டு லாப வரம்பு உயர்ந்துள்ளது. தயாரிப்பு துறையில், வட்டிச் செலவினங்கள் மிதமான அளவில் இருந்தன. ஒட்டுமொத்தத்தில், கடந்த நிதியாண்டில்,அனைத்து துறை சார்ந்த நிறுவனங்களின் நிகர லாபம் அதிகரித்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## தமிழகத்திலும் முதலீடு செய்ய லெனோவோ நிறுவனம் விருப்பம்

சென்னை செப். 5–

லெனோவோ நிறுவனம், புதுவையில் மட்டுமின்றி, தமிழகத்திலும் மொபைல் போன் தயாரிப்பு தொழிற்சாலையை அமைக்க முன்வந்துள்ளது.

அண்மையில், புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி, புதுவை சட்டமன்றத்தில் பேசும் போது, சீனாவைச் சேர்ந்த மொபைல் போன் தயாரிப்பு நிறுவனமான லெனோவோ, 2,000 கோடி ரூபாய் முதலீட்டில், புதுவையில் தொழிற்சாலை அமைக்க முன்வந்துள்ளதாகவும், இதற்கான பேச்சு நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில், லெனோவோ நிறுவனம், புதுவையில் மட்டுமின்றி, தமிழகத்திலும் தொழிற்சாலை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவது தெரிய வந்துள்ளது.


சென்னையை அடுத்த, சுங்குவார்சத்திரத்தில் செயல்பட்டு வந்த மோட்டோரோலா நிறுவனத்தின் தொழிற்சாலையில், லெனோவோ தன் தயாரிப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளதாக தெரிகிறது.

மோட்டோரோலா நிறுவனத்தை, அண்மையில், லெனோவோ கையகப்படுத்தியது. இதனால், மூடப்பட்டிருக்கும் மோட்டோரோலா தொழிற்சாலையிலேயே, லெனோவோ தன் தயாரிப்பை தொடரும் என, தெரிகிறது.

## இந்திய சுற்றுலா பயணிகளை ஈர்க்க அபுதாபி திட்டம்

புதுடில்லி, செப். 5–

நடப்பாண்டில், அபுதாபி நாட்டிற்கு செல்லும் இந்திய பயணிகளின் எண்ணிக்கை, 20 சதவீதம் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.



இதுகுறித்து, இந்தியாவிற்கான, அபுதாபி நாட்டின் சுற்றுலா துறை அதிகாரி பேஜன் தின்ஷா கூறியதாவது:

இந்தியாவில் இருந்து, அதிகம் பேர், அபுதாபி நாட்டிற்கு சுற்றுலா வருகின்றனர். கடந்த, 2015ம் ஆண்டில், இந்தியாவில் இருந்து, 2.80 லட்சம் பேர், அபுதாபி நாட்டிற்கு சுற்றுலா வந்துள்ளனர். நடப்பாண்டில், ஜூலை மாதம் வரை, 1.76 லட்சம் பேர் வந்துள்ளனர். இதனால், அந்த எண்ணிக்கை, நடப்பாண்டில், 20 சதவீதம் அதிகரிக்கும் என, தெரிகிறது.

அபுதாபி அரசு, சுற்றுலா பயணிகளை அதிகளவில் ஈர்க்க, பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக, நிறுவனங்களின் மாநாடு, கண்காட்சி, ஆண்டு பொதுக் குழு கூட்டங்களை நடத்துவதற்கு சாதகமான சூழலை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஜான்சன் அண்ட் ஜான்சன் தெலுங்கானாவில் முதலீடு

ஐதராபாத், செப்.5–

தெலுங்கானாவில் முதலீடு செய்ய, ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்துக்கு, அம்மாநில அரசு அழைப்பு விடுத்துள்ளது.

ஆரோக்கிய பராமரிப்பு பொருட்கள் துறையில், ஜான்சன் அண்ட் ஜான்சன் ஈடுபட்டு வருகிறது. இந்த நிறுவனத்திற்கு, தெலுங்கானா மாநிலம், மெகபூப்நகர் மாவட்டத்தில் தொழிற்சாலை உள்ளது. இதை, இந்த நிறுவனத்தின் சர்வதேச துணை தலைவர் காதி வெங்கெல் பார்வையிட்டார். அப்போது, அவர், அம்மாநில தொழில் துறை அமைச்சர் கே.டி.ராமாராவை சந்தித்து பேசினார்.

அப்போது, ராமாராவ் கூறியதாவது:

எங்கள் மாநிலத்தில், ஆரோக்கிய பராமரிப்பு, பயோ டெக்னாலஜி துறைகளில் முதலீடு செய்வதற்கு, அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே, ஜான்சன் அண்ட் ஜான்சன், எங்கள் மாநிலத்தில், மருத்துவ நகரம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைக்க முதலீடு செய்ய வேண்டும். தெலுங்கானா அரசு, உற்பத்தி துறையில் முதலீடு செய்வோருக்கு முன்னுரிமை அளிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## தேயிலை உற்பத்தி அதிகரிக்கும் 'இக்ரா' அமைப்பு தகவல்

கோல்கட்டா, செப். 5–



நடப்பாண்டில், நாட்டின் தேயிலை உற்பத்தி சற்றே அதிகரிக்கும் என, 'இக்ரா' அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகளவில், தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில், இந்தியா முன்னணியில் உள்ளது. இந்தியாவில், தேயிலை சாகுபடி செய்ய, போதிய இடம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், கடந்த மூன்று ஆண்டுகளில், தேயிலை உற்பத்தி குறைந்த அளவில் அதிகரித்து வருகிறது. அதன்படியே, நடப்பாண்டிலும், தேயிலை உற்பத்தி சற்றே அதிகரிக்கும் என தெரிகிறது.

நடப்பாண்டில், ஜூன் வரையிலான காலத்தில், நாட்டின் தேயிலை உற்பத்தி, இரண்டு சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த, 2015ல் தேயிலை ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், முந்தைய ஆண்டை விட, 10 சதவீதம் அதிகரித்துள்ளது. நடப்பாண்டில், ஜூன் வரையில், தேயிலை ஏற்றுமதி, ஆறு சதவீதம் உயர்ந்துள்ளது. நாட்டின், மொத்த கறுப்பு தேயிலை ஏற்றுமதியில், 20 சதவீதம் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது.